கவிதை

மீண்டும் பகுத்தறிவு

மனிதன் நான் என்று சொல்லிக்கொள்வாய்
ஆறறிவு கொண்டேனென்று அழகாய் ஒரு கிரீடம்
உனக்கு நீயே சூட்டிக்கொள்வாய்!

கண்ணுக்கு முன்னாலொரு சிசு பாலின்றியழுது
தன் ஜீவன் கரைக்கையில்.

கண்ணுக்கு தெரியா கடவுளுக்கதை குடம் குடமாய் கொண்டு
சென்று ஊற்றி கும்பாபிசேகம் செய்வாய்!

மஞ்சள் கயிறில்கூட ஒருதாலி கொள்ள முடியாமல்
மலர்கள் சில "மணமிழந்து" போகையிலே
இல்லத்தாள் இருக்க இன்னொரு துணை தேடி
தங்கத்தால் கொலுசு அவளுக்கு வேண்டியலைந்து – நீ
தரங்கெட்டு போயிருப்பாய்!

பட்டினியோடு உன் தாய் குடலெரிந்து குமுறியழுவாள்
நீயோ. விஜய் படத்துக்கு சென்று விசில் அடித்து
மகிழ்ந்திருப்பாய்!

இனம் .. இனம் என்று எழுத்தில் மட்டும் வீரம் கொள்வாய்
எடுத்துச்சொல்லி வந்து யாரும் உதவி கேட்டால்
கதவை இழுத்துச் சாத்தி அவர் மனசை கொல்வாய்
பழம் கிடைத்தால் போதும்... தாயை வெட்டி வாழை கன்றின்
காலடியில் புதைப்பாய்.
பட்டாம் பூச்சி சிறகில் நூல் கட்டி.. அது பதைப்பதை பார்த்து
பட்டம் விட்டேன் என்பாய்!

உயிர்களை வதைப்பதை ஒரு பொழுதுபோக்காய் கொள்வாய்...
உருப்படாத இந்த அறிவுக்கு... பகுத்தறிவென்று பதிலும் வேறு
சொல்வாய்!

அலரிப்பூக்கள் கொண்டு அலங்கரித்த மகுடம் யாருக்கு வேண்டும்?
கறையான் புற்றை அலங்கரித்த கனகாம்பர மலரானாய் .. நீ
போ நீயும் உன் பகுத்தறிவும்...

- ஜனார்த்தனி

அறிவு

மௌனத்தைக்கடப்பதற்கு
வழியென்ன சொல்
ஒரு கேள்விக்கும்
அதன் பதிலுக்குமிடையில்
அந்தரித்துக் கொண்டிருக்கும்
கனவுப் பூ
அதன் நிறங்களின் மீது வரைகிறது
திவ்ய வாசனையோடான
ஆயிரமாயிரம் கதைகளை
படித்தறிய மனமிருந்தால் சொல்
மொழிபெயர்க்கலாம் அந்த
ரகசியத்தின் ஈரமூறிய அன்பின் ஆதர்சத்தை

ஒரு காலம் கரைகிறது
இன்னும் எத்தனை பொழுதுகள்
இந்தத் தோணி
கரையிலேயே கட்டப்பட்டிருக்கும்

அக்கரை போக இக்கரையில்
காத்திருக்கும் ஒரு பயணி

கரையில்
தனிமரத்தின் மேலே வெயில்
கீழே குளிரூற்றும் நிழல்

தோணியிலும் மரத்திலும்
மாறிமாறிப்பறந்து
காதல் பெருக்கும் சிறு
பறவைகளைக் கண்டாயா
அவற்றின் குதூகலத்தைப் பார்த்தாயா
ஒரு ராச்சியம்
உனக்காகவே காத்துக்கிடக்கிறது

- வெளிவாசல்பாலன்

ஒன்றேனும் நினைத்ததுண்டா?

புலம்பெயர்ந்து வந்திங்கே
புதுவாழ்வு பெற்றாலும்
பிறந்தஎம் மண்நினைவாய்
என்றென்றும் வாழ்கின்றோம்
எல்லோர் முன்னாலும்
எடுப்பாகப் பேசும்பலர்
எம்மண்ணின் குறைகளைய
எதனையுமே செய்ததில்லை

பசியெடுக்க வில்லையெந்தன்
பிள்ளைக்கு எனச்சொல்லி
பரிகாரம் செய்வதற்காய்ப்
பகலிரவாய் அலைபவர்கள்
பசியெடுத்த போதெல்லாம்
பச்சைத் தண்ணீரால்
பசிமாற்றும் எம்மீழக்
குழந்தைகளை நினைப்பதில்லை

கிழங்குப் பொரியலுடன்
குளிர்பானம் கொடுத்துத்தம்
குழந்தை இடையுணவுத்
தேவையினைப் போக்கும்பலர்
கிழங்கை அவித்துத்தம்
முழுநேர உணவாக்கும்
கண்மணிகள் பசியகற்ற
உருப்படியாய்ச் செய்ததில்லை

பிறந்த நாளென்றும்
பிறவென்றும் கொண்டாடிப்
புகைப்படப் பெட்டிமுன்னால்
புன்னகைத்து நிற்கும்பலர்
போர்செய்த கொடுமையினால்
பெற்றவரைப் பிரிந்திழந்து
புளுதியிலே புரள்கின்ற
பிள்ளைகளை நினைப்பதில்லை

காதலர் தினத்தினிலே
களியாட்டம் செய்யும்பலர்
கணவரையே இழந்துநிற்கும்
கன்னியரை நினைப்பதில்லை
மண்ணிற்காய் உயிர்துறந்த
மறவர்கள் மறைவாலே
மனம்நொந்து போயிருக்கும்
மனைவியரை நினைப்பதில்லை

உடல்மெலியும் வழிதேடி
ஊரெல்லாம் அலையும்பலர்
உணவிற்கே வழியில்லா
ஊரவரை நினைப்பதில்லை
தமிழுக்காய் உயிர்கொடுக்கத்
தயங்காத தீரர்களை
தரணிக்குத் தந்திட்ட
தாய்மாரை நினைப்பதில்லை

பெற்றவரை நினைப்பதற்கும்
நாளொன்றை ஒதுக்கிவைத்த
பிறநாட்டார் வழக்கினையும்
பிடித்துநிற்கும் தமிழர்பலர்
பெற்றெடுத்த பிள்ளைகளை
போர்க்களத்தில் இழந்துவிட்டு
புறக்கடையில் கலங்கிநிற்கும்
பெற்றோரை நினைப்பதில்லை

- கன்னல்

பிரச்சாரம்

ஆறு காலில் நின்று
தலையில் ஓலை சுமந்து
தட்டிவாய் திறந்து வரவேற்று
இளைப்பாற நிழலாய்
வானழுதால் குடையாய்
காற்றுக்குத் தடுப்பாய்
பனிக்குப் போர்வையாய்
படுத்துறங்க மறைப்பாய்
பார்ப்போர்க்கு எளிமையாய்
ஏழைக்கு மாளிகையாய்
இருக்கும் குடில்களெல்லாம்
மகிந்தவிற்குப் புலிப்பாசறையாம்
அதனால்தான் குண்டுவீச்சாம்
சிதறிய முகடுகள்
தெங்குமர வட்டுக்களில்
குழந்தைகளின் புத்தகங்கள்
கொல்லைபுற வேலிகளில்
ஏழைகளின் துணிமணிகள்
இடிந்தமண் சுவர்களுக்குள்
பண்டங்கள் பாத்திரங்கள்
குண்டுவிழுந்த குழிகளுக்குள்
இவையெல்லாம் தெரிந்தும்கூட
பரப்புரைகள் படுகேவலமாக.

-வ.கணேஷ்.

ஆயரிசை

மயானக் குருவியின் இசைக்குறிப்பில்
எனது குரலின் துடிப்பு
பதிவுசெய்யப்பட்டிருக்கிறது

அது துயரங்களை அள்ளிவந்த காற்றின்
இழையறுத்து சுதியும் லயமும் சேர லாபிக்கிறது

நெஞ்சுக்குள் எரியும் நெருப்பும்
மீள மீள உயிர்க்கும் துயரங்களுமே
பாடுபொருளாகின்றன

கிளைவிரிந்த எனது மன வெளிகளில்
இன்னும் ஒளியெறிக்கவில்லை
காற்று வீசவில்லை

இலட்சிய விம்பமும்
துன்பியல் சாயமிடப்பட்ட காதலும்
எண்ணிமுடிக்க முடியாத தோல்விகளுமே
வாசனையோடு பூத்திருக்கின்றன

எந்தச் சாமியும் இந்தப் பூக்களை
பூசைக்கு ஏற்கவில்லை
என் வாலிபத்தோடு வலிகளே நெருக்கமாயின

வலிகளைத் தாண்டி புறப்படும் நேரம்
மயானத்தின் வெளிகளிலெல்லாம் இசைவிரிகிறது
துயரம் நிறைந்த எனது குரலின் துடிப்புகளோடு

- விசித்ரா

SAM
SOLICITORS & COMMISSIONERS FOR OATHS
உங்களது அகதி விண்ணப்பங்கள் நிராகரிக்கபட்டு
நீண்டகாலம் வேலை செய்திருப்பீர்களாயின் விசா எடுப்பதற்கு
appeals and representation on all Tribunal Hearing
சம்பந்தமான சேவைக்கு எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.
உங்களது வியாபார ஸ்தாபனங்கள் வீடுகள்
விற்றல், வாங்குதல் சம்பந்தமான சட்ட சேவைக்கும்
எங்களை நாடவும்!!
Tel: 0208 770 7143
Fax: 0208 643 9245
www.samsolicitors.com
info@samsolicitors.com
IMMIGRATION & ASYLUM
JUDICIAL REVIEW
CIVIL LITIGATION
CRIME
DIVORCE & FAMILY MATTERS
EMPLOYMENT
HOUSING / LANDLORD & TENANT
COMMERCIAL CONVEYANCING
RESIDENTIAL CONVEYANCING
LIQUOR LICENSING
288, High Street, Sutton, Surrey, SM1 1PQ